**செய்தி வெளியீடு எண்: 1150** **நாள்:19.11.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டம், பிளவக்கல் பெரியாறு மற்றும் கோவிலாறு அணைகளிலிருந்து பிளவக்கல் திட்டத்தில் பாசன வசதி பெறும் கண்மாய்களுக்கு வினாடிக்கு 150 க.அடிவீதம் 20.11.2021 முதல் 5 நாட்களுக்கு மற்றும் பெரியாறு கால்வாய் நேரடி பாசனத்திற்கு வினாடிக்கு 3 க.அடி வீதம் 20.11.2021 முதல் 28.02.2022 வரையிலும் தண்ணீர் திறந்துவிடவும், மேலும் நீர்வரத்து மற்றும் நீர் இருப்பு பொறுத்து அனைத்து கண்மாய் பாசனத்திற்கு தொடர்ந்து 28.02.2022 வரை தண்ணீர் திறந்துவிடவும் அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் இத்திட்டத்தில் உள்ள 553.46 ஹெக்டேர் கண்மாய் பாசன நிலங்களும், பெரியாறு கால்வாய் மூலம் 249.47 ஹெக்டேர் நேரடி பாசன நிலங்களும் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**பொதுப்பணித்துறை**

**************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**